முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
முன்னிலை - திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.பி.எல்.,
முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
2023 ம் வருடம் செப்டம்பர் மாதம் 26 நாள் செவ்வாய்க்கிழமை
(திருவள்ளுவராண்டு 2054 – ஸ்ரீ சோபகிருது வருடம் - புரட்டாசித் திங்கள் 9 ம்நாள்)

இடைநிலை மனு எண்.8/2023
அசல் வழக்கு எண்.432/2019

1. ஜெயராம் சிங் (இறந்துவிட்டார்)
2. சுவர்ணலதா (எ) லதா பாய்,
3. தினேஷ் சிங்,
4. கோகுல் ராம் சிங். .. மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

// எதிர் //

கிருஷ்ணா பாய். ..எதிர்மனுதாரர்/வாதி

21.06.2023 மற்றும் 03.07.2023 ஆகிய தேதிகளிட்ட இம்மனு உ.வி.மு.ச.கட்டளை 8, விதி 9 மற்றும் பிரிவு 151 ன்படி 2 முதல் 4 மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு, இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 13.09.2023 ம்தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 2 முதல் 4 மனுதாரர்கள் தரப்பில் திரு.வி.மாதேஸ்வரன், வழக்கறிஞர் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.சி.சுப்ரமணியம், வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், 1 ம் மனுதாரர்/பிரதிவாதி இறந்துவிட்டதாலும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

உத்தரவு

கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ளக் கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனு உரையின் சுருக்கம் பின்வருமாறு:</u>

3ம் மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி. 1ம் மனுதாரர் இறந்த பிறகு அவருடைய வாரிசுகளான 2 முதல் 4 மனுதாரர்கள் அசல் வழக்கில் தரப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளார். அசல் வழக்கானது 21.06.2023ம்தேதிக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. உண்மையில் அசல் வழக்கானது 14.06.2023ம்தேதிக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்த வாய்தா போடப்பட்டிருந்தபோது ஏற்கனவே 1ம் மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டிருந்த எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்வதாக 2 முதல் 4 மனுதாரர்கள் தரப்பில் குறிப்பறிக்கை தாக்கல் செய்து மேற்படி குறிப்பறிக்கையிலேயே கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையை தக்க வைத்துக் கொள்வதாக குறிப்பிடப்பட்டு மேற்படி குறிப்பறிக்கையும் நீதிமன்றத்தால் பதியப்பட்டுள்ளது. எனவே, ஏற்கனவே 1ம் மனுதாரர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சில சட்டப்படியான கேள்விகள் குறித்து குறிப்பிடப்படாமல் விடுபட்டுவிட்டது. எனவே, 1ம் மனுதாரர் இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுகளாக 2 முதல 4 மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும் பாதிப்பும் ஏற்பட்டுவிடும். எனவே, மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>எதிர் உரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானது, கற்பனையானது, சட்டப்படியும், சங்கதி -களின்படியும் நிலைக்கத்தல்ல. மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் உண்மையானதல்ல, தவறானவை. அசல் வழக்கில் ஏற்கனவே 1ம் மனுதாரர்/பிரதிவாதியால் 22.10.2019 தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் தற்போது 2 முதல் 4 மனுதாரர்கள் புதிய வழக்குச் சங்கதிகளை உட்புகுத்தும் விதமாக கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்கள். அசல் வழக்கில் 1ம் மனுதாரர்/பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு அசல் வழக்கானது விசாரணைக்காக வாய்தா போடப்பட்ட சமயத்தில் 1ம் மனுதாரர் வழக்கை ஒப்புக் கொண்டு

லோக் அதாலத் நீதிமன்றத்தி வழக்கை அனுப்ப வேண்டுமென்று குறிப்பறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதனடிப்படையில் வழக்கானது சமரசத்திற்காக லோக் அதாலத் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள -தால், 1ம் மனுதாரரான பிரதிவாதியால் வழக்குச் சங்கதிகளை ஒப்புக் கொண்டுள்ளார் என்று கருத வேண்டும். 1ம் பிரதிவாதி 28.07.1997 தேதியில் தனது தகப்பனாரின் உரிமை மூலத்தை ஒப்புக் கொண்டு ஆவணம் எழுதிக் கொடுத்தார். அந்த வகையில் 1ம் பிரதிவாதியின் தகப்பனாரின் சுயார்ஜித சொத்து. 1ம் பிரதிவாதி அவரது குடும்ப நலனுக்கு எதிராக செயல்பட்டு வந்ததால் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் எதிர்மனுதாரரின் தாயார் பெயருக்கு எழுதி வைத்தார். தகப்பனாரின் இறப்பிற்குப் பிறகு உயில் சாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதியின் தாயார் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை எதிர்மனுதாரருக்கும் எதிர்மனுதாரரின் மூத்த சகோதரிக்கும் 02.05.2007 தேதியில் எழுதி வைத்தார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி வடபுற பகுதி வீடானது மூத்த சகோதரிக்கும், தாவாச் சொத்து உட்பட தென்புற பகுதியானது எதிர்மனுதாரருக்கும் ஒதுக்கப்பட்டு முழு உரிமையாளராக இருந்து அனுபவித்து வந்து சொத்து வரி, தண்ணீர் வரி ஆகியவை தங்களது பெயரில் செலுத்தி வருகிரார்கள். மேற்படி விவரமானது மனுதாரர்களுக்கு நன்கு தெரியும். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எதிர்மனுதாரரின் பெயருக்கு இருக்கும் விவரம் தெரிந்த பிறகும் அதை ஆட்சேபணை செய்யவில்லை. எனவே, மனுதாரர்கள் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமை இல்லை. கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கின் சங்கதிகளுக்கு முரண்பாடானது. மனுதாரர்கள் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதன் மூலம் புதிய நிலைப்பாட்டை எடுக்கவோ அல்லது புதிய வழக்கை உட்புகுத்தவோ உரிமையற்றவர்கள்.எனவே, இந்த மனு அனுமதிக்கத்தக்கதல்ல, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. பிரச்சினைக்குத் தீர்வு:

மனுதாரர்கள் தரப்பில், 2ம் மனுதாரரின் கணவரும் 3, 4 மனுதாரர்களின் தகப்பனாருமான ஜெயராம் சிங் காலமான பிறகு 2 முதல் 4 மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கில் தரப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு கடந்த 21.06.2023 தேதியில் தாவா விசாரணைக்காக வாய்தா போடப்பட்டதாகவும், மேற்படி வழக்கில் கடந்த 14.06.2023 தேதியில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா இருந்த சமயத்தில் 2ம் மனுதாரரின் கணவரும் 3, 4 மனுதாரர்களின் தகப்பனாருமான ஜெயராம் சிங் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை ஏற்றுக் கொண்டு மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையை தக்க வைத்துக் கொண்டு குறிப்பாணை தாக்கல் செய்ததாகவும், மேற்படி குறிப்பாணை நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், சில முக்கியமான வழக்கு சங்கதிகளானது ஜெயராம் சிங் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லாமல் விடுபட்டுவிட்டதாகவும், எனவே, 2 முதல் 4 மனுதாரர்கள் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும் அதனை ஏற்றுக் கொண்டு மனு அனுமதிக்கப்பட வேண்டுமென வாதிடப் -பட்டது.

5.2 எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் எல்லாம் தவறானவை என்றும், மனுச் சங்கதிகள் மிகைப்படுத்தப் -பட்டுள்ளதாகவும், அசல் வழக்கானது 21.06.2023 தேதியில் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த விவரம் சரியானது என்றும், 14.06.2023 தேதியில் மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா இருந்தபோது 2ம் மனுதாரரின் கணவரும் 3, 4 மனுதாரர்களின் தகப்பனாரான ஜெயராம் சிங் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை ஏற்றுக் கொண்டு குறிப்பானை தாக்கல் செய்ததாகவும் அதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டதாகவும் கூறியுள்ள விவரம் தவறானது என்றும், 2ம் மனுதாரரின் கணவரும் 3, 4 மனுதாரர்களின் தகப்பனாரான ஜெயராம் சிங் கடந்த 22.10.2019 தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், தற்போது மனுதாரர்கள் புதிய சங்கதிகளைச் சொல்லி இந்த மனு தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு தாவா விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் அசல்

வழக்கை மக்கள் நீதிமன்றத்தின் மூலமாக சமரசம் செய்து கொள்ள இருப்பதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு அதன்பேரில் 24.10.2019 தேதியில் மக்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அந்தச் சமயத்தில் எதிர்மனுதாரரின் உரிமை மூலத்தை ஒப்புக் கொண்டு குறிப்பாணை தாக்கல் செய்திருந்ததாகவும், 1ம் பிரதிவாதி 28.07.1997 தேதியில் தனது தகப்பனாரின் உரிமை மூலத்தை ஒப்புக் கொண்டு ஆவணம் எழுதிக் கொடுத்ததாகவும், அந்த வகையில் 1ம் பிரதிவாதியின் தகப்பனாரின் சுயார்ஜித சொத்து என்றும், 1ம் பிரதிவாதி அவரது குடும்ப நலனுக்கு எதிராக செயல்பட்டு வந்ததால் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் எதிர்மனுதாரரின் தாயார் பெயருக்கு எழுதி வைத்ததாகவும், தகப்பனாரின் இறப்பிற்குப் பிறகு உயில் சாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதியின் தாயார் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை எதிர்மனுதாரருக்கும் எதிர்மனுதாரரின் மூத்த சகோதரிக்கும் 02.05.2007 தேதியில் எழுதி வைத்ததாகவும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி வடபுற பகுதி வீடானது மூத்த சகோதரிக்கும், தாவாச் சொத்து உட்பட தென்புற பகுதியானது எதிர்மனுதாரருக்கும் ஒதுக்கப்பட்டு முழு உரிமையாளராக இருந்து அனுபவித்து வந்து சொத்து வரி, தண்ணீர் வரி ஆகியவை தங்களது பெயரில் செலுத்தி வருவதாகவும், மேற்படி விவரமானது மனுதாரர்களுக்கு நன்கு தெரியும் என்றும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எதிர்மனுதாரரின் பெயருக்கு இருக்கும் விவரம் தெரிந்த பிறகும் அதை ஆட்சேபணை செய்யவில்லை என்றும், மனுதாரர்கள் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமை இல்லை என்றும், கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கின் சங்கதிகளுக்கு முரண்பாடானது என்றும், மனுதாரர்கள் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதன் மூலம் புதிய நிலைப்பாட்டை எடுக்கவோ அல்லது புதிய வழக்கை உட்புகுத்தவோ உரிமையற்றவர்கள் என்றும் இந்த மனு அனுமதிக்கத்தக்க -தல்ல என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

5.3 எதிர்மனுதாரர் மேற்படி அசல் வழக்கை தாவாச் சொத்தைப் பொருத்து பாகப் பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் கோரியும் தாவாச் சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கக் கோரியும் மேலும் தாவாச் சொத்திற்கு இழப்பீடாக மாதம் ரூ.3,000/- வீதம் 01.04.2018 முதல் 31.03.2019 வரையிலும் அதன் பின்னிட்டு தாவாச் சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கும் வரையிலும் இழப்பீடு வழங்க கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதியான 3, 4 மனுதாரர்களின் தகப்பனாரான ஜெயராம் சிங் என்பவர் கடந்த 24.10.2019 தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து இருதரப்பு வாதுரைகளின்பேரில் தாவாவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் குறித்து எழுவினாக்கள் வனையயப்பட்டு தாவா விசாரணைக்கு பட்டியலிடப்பட்ட சமயத்தில் 3, 4 மனுதாரர்களின் தகப்பனார் ஜெயராம் சிங் இறந்துவிட்டதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 4 மனுதாரர்கள் வாரிசு அடிப்படையில் இவ்வழக்கில் தரப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு மனுதாரர்கள் தாவாவில் வாரிசு அடிப்படையில் இடையில் சேர்ந்த நபர்கள் என்பதால் மனுதாரர்களுக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய உரிமை வழங்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பிலும் 3, 4 மனுதாரர்களின் தகப்பனார் ஜெயராம் சிங் என்பவர் 24.10.2019 தேதியில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை ஏற்றுக் கொண்டு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையை தக்க வைத்துக் கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி குறிப்பாணையை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு பதிவு செய்து கொண்டு தாவா மீண்டும் விசாரணைக்கு பட்டியலிடப்பட்ட சூழ்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் 3, 4 மனுதாரர்களின் தகப்பனார் ஜெயராம் சிங் என்பவர் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது சட்டம் சார்ந்த சில சங்கதிகளை தெரிவிக்கப்படாமல் விடுபட்டுவிட்டதாகவும், அதனால் மேற்படி விவரத்தை கூடுதல் எதிர்வழக்குரை மூலமாக தெரிவிக்க வேண்டியிருப்பதால் இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை பெற்றுக் கொண்டு மனுவை அனுமதிக்க வேண்டுமென வாதிடப்பட்டிருந்தபோதும், எதிர்மனுதாரர் தரப்பில் 3, 4 மனுதாரர்களின் தகப்பனார் தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு விரோதமாக புதிய சங்கதிகளை உட்புகுத்தி கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்கள் தரப்பில் ஜெயராம் சிங் என்பவர் தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு

முரண்பாடாக செயல்பட முடியாது என்றும், மனுதாரர்கள் தரப்பில் புதிய சங்கதிகளை உட்புகுத்தி கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாலும், ஏற்கனவே அசல் வழக்கானது விசாரணைக்கு பட்டியலிடப் -பட்டுள்ளதாலும் 1ம் பிரதிவாதி ஜெயராம் சிங் என்பவர் மக்கள் நீதிமன்றத்திற்கு சமரசத்திற்கு அனுப்பப்பட்டபோது எதிர்மனுதாரரின் உரிமை மூலத்தை ஒப்புக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளதைப் பொருத்து பார்க்கும்போது 3, 4 மனுதாரர்களின் தகப்பனாரான ஜெயராம் சிங் 24.10.2019 தேதியில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 01.07.1996 தேதியில் தனது தாயாரான லட்சுமிபாய் பெயரில் ஏற்பட்டதாகச் சொல்லப்படும் உயில் சாசனத்தை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது எதிர்மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் மூத்த சகோதரி பெயருக்கு 02.05.2007 தேதியில் லட்சுமிபாய் என்பவரைால் எழுதிக் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் செட்டில்மெண்ட் ஆவணத்தைப் பொருத்து மறுப்பு தெரிவிக்காததாலும் அதேபோல் ஜெயராம் சிங் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தனது தகப்பனார் சொத்தில் ¼ பாகம் உரிமை இருப்பதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு அவருடைய இறப்பிற்குப் பிறகு மனுதாரர்கள் வாரிசு அடிப்படையில் தரப்பினர்களாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதால் 3, 4 மனுதாரர்களின் தகப்பனார் ஜெயராம் சிங் என்பவர் அசல் வழக்கில் என்ன நிலைப்பாடு எடுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்தாரோ அதற்கு விரோதமாகவோ புதிய சங்கதிகளை உட்புகுத்தியோ 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் புதிய சங்கதிகளைப் பொருத்து வாதுரைக்க முடியாது என்றும், 3, 4 மனுதாரர்களின் தகப்பனாரான ஜெயராம் சிங் தனது எதிர்வழக்குரையில் தாவாச் சொத்துக்களில் தனக்கு ¼ பாகம் இருப்பதாக தெரிவித்துள்ளதற்கு விரோதமாக மனுதாரர்கள் தரப்பில் தாவாச் சொத்தில் தங்களுக்கு 1/3 பாகம் இருப்பதாக மிகுதியான பங்கைப் பொருத்து முந்தைய எதிர்வழக்குரைக்கு முற்றிலும் விரோதமாக புதிய நிலைப்பாடு எடுத்து இம்மனுவுடன் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனுவை அனுமதிக்க போதுமான முகாந்திரம் இல்லை என்று முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக, இந்த மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலி வடிவில் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2023ம் வருடம் செப்டம்பர் மாதம் 26ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

M RAMACHANDRAN
Digitally signed by M RAMACHANDRAN
Date: 2023.09.26 17:55:33 +0530

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
ஈரோடு.

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>
(இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை... )

M RAMACHANDRAN
Digitally signed by M RAMACHANDRAN
Date: 2023.09.26 17:55:48 +0530

மு.கூ.சா.நீ., ஈரோடு.